பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 27 செவ்வாய்க்கிழமை 12.08.2025 கதிர் 276

**இனி இது ரகசியம் அல்ல!**

முன்னாள் முதலமைச்சர்கள் மூவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. ☞2

## வேலையற்ற பட்டதாரிகள் விடயத்தில் இந்த ஆளும்தரப்பும் அசமந்தப்போக்கு

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தி ஆட்சியைப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைகின்ற நிலையிலும், இன்னும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படாமல் உள்ளன. குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளின் விவகாரத்தில் ஆளும்தரப்பு அசமந்தப் போக்குடனேயே செயற்பட்டு வருகிறது. கடந்த காலங்களைப் போன்று இந்த ஆட்சியிலும் பட்டதாரிகள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திங்கட்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜேவிபியின் தலைவர் ஆட்சியைப் பொறுப்பேற்று சுமார் ஒரு வருடம் நிறைவடைகிறது. ஆனால் இன்றும் நாட்டில் 40,000 வேலையற்ற பட்டதாரிகள் தொழில் இன்றி வீதிகளிலேயே காத்திருக்கின்றனர். தேர்தல் காலத்தில் இந்த வேலையற்ற பட்டதாரிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைகளுக்கு தீர்வாக ‘வளமான நாடு, அழகான வாழ்க்கை’ எனும் கொள்கை அறிக்கையின் 72ஆம் பக்கத்தில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும், இவற்றில் எதுவும் இதுவரை இவர்களால் நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆட்சியிலும் பட்டதாரிகள் ஏமாற்றப்பட்டுள்ளனர். ☞3

## அரசுத் தலைவரின் ஆவேசப் பேச்சுக்கு நான் அச்சமடைய மாட்டேன்

### வேண்டுமானால் சிஐடியில் முறையிடுக என்கிறார் உதய கம்மன்பில

கடற்படையின் முன்னாள் தளபதி நிசாந்த உலுகேதென்னவின் கைது தொடர்பில் நான் குறிப்பிட்ட விடயங்கள் பொய்யாயின், அரசுத் தலைவர் எனக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு அளிக்கலாம். அரசுத் தலைவர்யின் ஆவேச பேச்சுக்கு அச்சமடைய போவதில்லை என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றியிருந்தார். அரசுத் தலைவர்யின் உரையை தெளிவாக அவதானித்தால் அவர் கலக்கமடைந்திருப்பதை விளங்கிக்கொள்ளலாம்.

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் சூழ்ச்சி செய்யப்படுவதாக குறிப்பிட்ட அரசுத் தலைவர் ஆளும்தரப்புக்கு எதிரான சூழ்ச்சிகளை தோற்கடிப்பதாகவும், இருக்கும் சட்டங்கள் போதாது என்றால் புதிய சட்டங்கள் இயற்றப்படும் என்றும் அரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தை கவிழ்த்து ☞3

## அமைச்சர் வசந்த சமரசிங்க உடன் பதவி விலகவேண்டும்

### ஐ.தே.க. செயலாளர் வலியுறுத்து

சுப்ரிம் செட் செயற்கை கோள் தொடர்பில் பிரதமர் நாடாளுமன்றத்துக்கு தெரிவித்த பதில், அவரை சிக்கவைக்க மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட செயலா என்ற சந்தேகம் எழுகிறது. அதனால் பிரதமரின் பதிலுக்கு மாற்றமான கருத்தை நாடாளுமன்றத்தில் தெரிவித்த அமைச்சர் வசந்த சமரசிங்க இதுதொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். அல்லது அமைச்சரவையின் ☞3

# காற்றாலை வாகனங்கள் மறிப்பு மன்னாரில் நள்ளிரவில் பதற்றம்

### தீவிரம் பெறுகிறது மக்கள் பேராட்டம்

மன்னாரில் மக்களின் எதிர்ப்பையும் மீறி முன்னெடுக்கப்பட்டுவரும் 2ஆவது கட்ட காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய திட்டங்களுக்கு எதிராக, மன்னார் பஜார் பகுதியில் கடந்த ஒன்பது நாட்களாக தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது. நேற்று இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு கிராம மக்களும் கலந்துகொண்டனர். மக்கள் கூட்டம் பெருகியதை அடுத்து நேற்று நள்ளிரவில் காற்றாலைகளுக்கான உபகரணங்களை ஏற்றிவந்த பெரும் வாகனங்களை மக்கள் மன்னார் தீவுக்குள் நுழையவிடமால் தீவு வாசலிலேயே மறித்துதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நள்ளிரவுக்கு மேலு அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. அமைதியின்மை ஏற்பட்டது. பொலிஸார் மக்களை பலவந்தமாகத் தடுக்க முற்பட்டால் அமைதியின்றை கலவரமாக மாறும் பதற்ற நிலை அதிகாலை வரையில் தொடர்ந்தது.

2ஆவது கட்ட காற்றாலை மின் கோபுரங்களை மன்னார் தீவுப் பகுதியில் அமைப்பதற்கான பாகங்கள் கனரக வாகனங்களில் கொண்டு வரப்பட்டபோது, ஞாயிற்றுக்கிழமை தள்ளாடிசந்தியில் மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதிலிருந்து, தள்ளாடி மற்றும் மன்னார் சுற்றுவட்டப் பகுதிகளில் பொது அமைப்புகள் மற்றும் மக்கள் சுழற்சி முறையில் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, காற்றாலை கோபுரங்களுக்கான பாகங்கள் பலத்த பொலிஸ் ☞2

## மன்னார் காற்றாலைத் திட்டத்தை எதிர்த்து வவுனியாவில் மனிதச் சங்கிலிப் போராட்டம்

மன்னாரில் முன்னெடுக்கவுள்ள காற்றாலைத் திட்டத்தை நிறுத்தக்கோரியும், இல்மனைற் அகழ்விற்கு எதிராகவும் மன்னாரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சத்தியாக்கிரக போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் மனிதச்சங்கிலி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்திற்கு அண்மையில் திங்கட்கிழமை (11) குறித்த போராட்டம் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டக்காறர்கள்,

அபிவிருத்தியின் பெயரால் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டங்களை நிறுத்தவேண்டும். இலங்கையின் மீன்பிடி தொழில் மற்றும், பறவைகளின் ☞2

## ‘எமது நிலம் எமக்கு வேண்டும்’ மன்னாரில் ஓக. 14 போராட்டம்

### எம்.பிகள் அனைவரும் ஒன்று திரள்கின்றனர்

மண்ணையும் மக்களையும் மீட்கவே ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி, அகிம்சை வழி போராட்டமாகவும் இருந்தாலும் சரி இந்த மண்ணில் இடம் பெற்றது. இந்த நிலையில் மன்னார் மக்களின் வாழ்வை பாதிக்கின்ற வகையில் முன்னெடுக்கப்படுகின்ற காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக வடக்கு கிழக்கில் உள்ள அரசியல் பிரதிநிதிகளை எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மன்னாரில் ஒன்றிணைத்து ‘எமது நிலம் எமக்கு வேண்டும்’ எனும் தொனிப்பொருளில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ☞2

## சுப்ரீம்செட் செய்மதி பற்றிப் பொய்கூறியவர் எம்.பியாகப் பதவி வகிக்கவே தகுதியற்றவர்

### முன்னாள் எம்.பி. லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

சுப்ரீம் செட் சந்ரிகா செய்மதி தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரியவும், அமைச்சரொருவரும் இருவேறு கருத்துக்களை தெரிவித்தமையானது நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறும் செயலாகும். இவர்கள் இருவர் கூறியதில் உண்மை எது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உள்ளது. இருவரில் பொய்யான கருத்தை கூறியவர் யாராக இருந்தாலும் அவர் நாடாளுமன்றத்தைப் ☞2

## சுப்ரீம் சட் குறித்த பிரதமரின் கருத்தால் ஜேவிபிக்குள் பெரும் கருத்து முரண்பாடு

### பொதுஜன பெரமுன வேட்பாளர் தெரிவிப்பு

ரொக்கட் பற்றி பிரதமர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்திய உண்மை மக்கள் விடுதலை முன்னணிக்குள் பெரும் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. தேசிய மக்கள் சக்திக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான முரண்பாடு தற்போது தீவிரமடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார். ☞2

## ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் சிறந்த முறைமை தயாராகிறது

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மற்றும் ஆசிரியர் நிர்வாக சேவையில் பணியமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பில் சிறந்த முறைமையை தயாரிப்பதாக பிரதமரும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சருமான (கலாநிதி) ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சப்ரகமுவ மாகாண முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத், மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேசல ஜெயரத்ன ஆகியோருக்கு எதிராக இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் சட்டவிரோதமாக வருமானம் ஈட்டினர் என்று கூறப்படும் முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இந்த விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேவிபி மற்றும் என்பிபி ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்பாக பெரும் ஊழல்களைப் பற்றியும் அவற்றைச் செய்தார்கள் என்று கூறப்படும் அரசியல்வாதிகளைப் பற்றியும் அரசியல்மேடைகள்எங்கும்முழுங்கியது. தாம் அதிகாரத்திற்கு வந்தால் அவர்கள் எல்லோரும் சிறைக்குள்தான் செல்லவேண்டியிருக்கும் என்றது. ஆனால் இன்று அவர்கள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் கைது செய்யப்படுபவர்களில் இத்தகைய பெரிய திமிங்கலங்கள் எவற்றையும் காணோம். எல்லாம் சின்ன நெத்தலிகளாகவே இருக்கின்றன.

அதனால் நெத்தலிகள் ஊழலில் ஈடுபடலாம் என்பது அர்த்தமில்லை. அதேநேரம்திமிங்கலங்கள்ஏன்சிக்கவில்லை என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே. திமிங்கலங்களைப் பிடிக்க ஆளும்தரப்பு விரும்பவில்லையா அல்லது திமிங்கலங்கள் மீது கை வைப்பதற்கு அச்சமா என்கிற கேள்வியும் நியாயமானதே!

.................................................

புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அரசமைப்பு பேரவை இன்று நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் கூடவுள்ளது.

நாட்டின் 37ஆவது பொலிஸ் மா அதிபராக பதில்பொலிஸ்மாஅதிபர் பிரியந்தவீரசூரியவை நியமிப்பதற்கு அவரது பெயரை அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கடந்த வாரம் கூடிய ஆரசமைப்பு பேரவைக்கு பரிந்துரைத்திருந்தார்.

தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வதற்காக 2002 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றும் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் பிரகாரம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பிரதம நீதியரசர் பி.பி.சூரசேன தலைமையிலான குழுவினால் நிரூபிக்கப்பட்டதன் பின்னர் இந்த பிரேரணை நாடாளுமன்றத்தில் 177 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மாஅதிபர் பதவியில் இருந்து நீக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பத்திரம் சபாநாயகரால் அரசுத் தலைவர்க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து புதிய பொலிஸ் மா அதிபர் பதவிக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பெயரை அரசுத் தலைவர் ஆரசமைப்பு பேரவைக்குப் பரிந்துரைத்துள்ளார். இந்தப் பரிந்துரை தொடர்பில் ஆராய்வதற்கு அரசமைப்புப் பேரவை இன்று கூடுகிறது.

நாட்டின் 36ஆவது பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் 2024.02.24 ஆம் திகதியன்று அப்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டார். தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டதை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் 09 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் கடந்த 2024.07.24 ஆம் திகதியன்று 'தேசபந்து தென்னகோன் பொலிஸ்மா அதிபராக பணியாற்றுவதை தடுக்கும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்தது.

இவ்வாறான பின்னணியில் 2024.09.24 ஆம் திகதியன்று அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவினால் பதில் பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டார்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காற்றாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புடன் மன்னார் நகரத்திற்குள் கொண்டு வரப்பட்டபோதும், மக்களின் போராட்டம் வலுவடைந்துள்ளது.

இன்று, கீளியன் குடியிருப்பு, நடுக்குடா, கட்டுக்காரன் குடியிருப்பு, பருத்திப்பன்னை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு உள்ளிட்ட கிராம மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு தங்களது ஆதரவை தெரிவித்தனர். மேலும், மன்னார் மாவட்ட ஒளிக்கலை ஒன்றியமும் முழுமையான ஆதரவை வழங்கியதோடு, அதன் உறுப்பினர்களும் போராட்டத்தில் இணைந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களானசெல்வம்அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளின் முழுமையான ஒத்துழைப்புடன், மன்னார் மக்களும் இளைஞர்களும் இரவு பகல் பாராது இந்தப் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

நேற்று நள்ளிரவு காற்றாலை உபகரணங்களுடன் மன்னார் தீவுக்குள் நுழைய முயன்ற வாகனங்களை இவர்கள் நகரில் வாயிலில் தடுத்து நிறுத்தினர். இதனால் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். ஆனால் வாகனங்கள் மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்க முடியாது என்று கூறி மக்கள் திட்டவட்டமாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் பலவந்தமாக போராட்டக்காரர்களை அகற்றினால் அது பெரும் கலவரமாக மாறும் நிலை காணப்படுவதாக அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு சரணாலயம், இயற்கை காற்றின் வலு முதலானவற்றிற்கு பெயர் பெற்ற இடமாக மன்னார் விளங்குகிறது.

இந்தநிலையில் ஏகபோக இராட்சத பல்தேசிய கம்பெனிகளின் இலாப வேட்டையாலும், இலங்கை அரசாங்கங்களின் கையாலாகாத நிலையாலும் அழிவை எதிர் நோக்கி உள்ளது மன்னார் தீவு.

ஏற்கனவே உள்ள காற்றாலைகளால் மீன் கரைக்கு வருவது குறைந்துவிட்டது மீன் இனப்பெருக்கம் குன்றிவிட்டது. காற்றாலைகளின் அமைப்பால் தரையில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்கள் வடிகாலமைப்பை மாற்றிவெள்ளப்பெருக்கு மற்றும் நிலத்தடி நீர் உவராதலை ஏற்படுத்தியுள்ளது.

காற்றாலைகளின் இரைச்சலால் மன்னாருக்கு வரும் வலசைப்பறவைகளின் வருகையை தடுக்கவும் பாதையை மாற்றவும் அவை காற்றாடிகளால் இறக்கும் நிலையையும் ஏற்படுத்தி உள்ளது. இது மட்டுமின்றி மக்களின் வாழ்விலும் காற்றாலைகளின் ஒலி மாசு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் மன்னார் மண்ணின் கீழ் இருக்கும் இல்மனைட் தோரியம் போன்ற கனிமவளங்கள் இன்றைய நவீன விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இராணுவ தேவைகளுக்காக உலக நாடுகளுக்கு தேவைப்படுகின்றது. அதில் முதலீடு செய்வது பெரும் லாபம் தரும் என்பதால் பல் தேசிய நிறுவனங்கள் முண்டியடக்கின்றன.

எனவே மன்னாரில் நடைபெற இருக்கின்ற இவ் அகழ்வு மன்னார் தீவையே மனித வாழ்வுக்கு உகந்ததாக இல்லாமல் செய்துவிடும் அளவிற்கு ஆபத்தானது.

இந்த காற்றாலை மற்றும் கனியஅகழ்வு நாட்டின் தேவைக்கானதன்றிபல் தேசிய கம்பெனிகளின் இலாபக் குவிப்புக்கானதே என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும் என்றனர்.

வவுனியா சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போராட்டத்தில், அரசியல் தரப்பினர்,சமூக செயற்பாட்டாளர்கள்,பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## சுப்ரீம் சட் குறித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணியின் பெலவத்த தலைமை காரியாலயத்தில் உடைந்து விழுந்த ரொக்கெட் பற்றி விசேட அவதானம்செலுத்தவேண்டும்.உண்மையை நீண்டகாலம் மறைத்து வைக்க முடியாது என்பது பௌத்த மத அற கோட்பாடாகும்.

மதம் மீது நம்பிக்கையில்லாத இந்த ஆளும்தரப்புக்கு மத கோட்பாடுகளே இன்று எதிராக முடிந்துள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகனை தொடர்புப்படுத்தி இதுவரை காலமும் முன்வைத்த குற்றச்சாட்டை பிரதமர் ஹரிணி அமரசூரிய பொய்யாக்கியுள்ளார்.

ரொக்கட் பற்றி பிரதமர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்திய உண்மை மக்கள் விடுதலை முன்னணிக்குள் பாரிய முரண்பாட்டை தோற்றுவித்துள்ளது. தேசிய மக்கள் சக்திக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான முரண்பாடு தற்போது தீவிரமடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

போலியானவாக்குறுதிகள்மற்றும்வெறுப்பு பேச்சுக்களினால்தாம்ஏமாற்றப்பட்டதைமக்கள் விளங்கிக்கொண்டுள்ளார்கள். அரசாங்கத்தின் போலியான செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் வெகுவிரைவில் அணிதிரள்வார்கள் என்றார்.

## எமது நிலம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரில்முன்னெடுக்கப்பட்டுவருகின்ற 2 ஆம் கட்ட காற்றாலை கோபுரம் அமைத்தல் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டம்ஒன்றைமன்னாரில்முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மன்னார் பஜார் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளகுறித்தபோராட்டத்தில் கலந்துகொள்ள வடக்கு கிழக்கை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கை சேர்ந்த அரசியல் செயல்பாட்டாளர்களை குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

குறித்த போராட்டம் ஊடாக நாங்கள் தென்னிலங்கைக்கு ஓர் செய்தியை சொல்ல வேண்டும். எமது மக்களையும், மண்ணையும் யாரும் அபகரிக்க முடியாது. நாங்கள் துப்பாக்கி ஏந்தி போராடிய போது தியாகங்களை செய்தவர்கள்.

எனவே அரசியல் கட்சி பேதங்களின்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர சபை, பிரதேச சபை, மாநகர பை உறுப்பினர்கள், அனைவரும் குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

தென்னிலங்கைக்கு நாங்கள் பாடம் புகட்டும் வகையில் எமது மண்ணையும் மக்களையும் காப்பற்றும் வகையில் இடம் பெறும் இப் போராட்டத்தில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் அழைப்பு விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சுப்ரீம் செட் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித்துவப்படுத்த தகுதியற்றவர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியிலுள்ள தனது இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் நாடாளுமன்றம் கூடிய போது நாடாளுமன்ற நிலையியற் கட்டளை, நாடாளுமன்ற சம்பிரதாயம் மீறப்படுவதை தெளிவாக அவதானித்தோம். சுப்ரீம்செட் சந்ரிகா செய்மதிக்கு அரச நிதி செலவிடப்படவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். ஆனால் அமைச்சரொருவர் அதற்கு அரச நிதி செலவிடப்பட்டதாகக் கூறினார். நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே காணப்படுகிறது. அரச நிதி பயன்படுத்தப்பட்டிருந்தால் அது நாடாளுமன்றத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இந்த செய்மதி தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆளுந்தரப்பினரால் இரு வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இருவரில் யார் உண்மையைக் கூறுகின்றனர் என்பதே தற்போது மக்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினையாகும். அதனை தெரிந்து கொள்வதற்கான உரிமை மக்களுக்கு உண்டு. பிரித்தானிய நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கமையவே எமது நாடாளுமன்றத்தின் பலநிலையியற்கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பொய்கூறுபவரால் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது என்பது பிரித்தானிய நாடாளுமன்றத்தின் சம்பிரதாயமாகும். அதேபோன்று பிரதமரின் கருத்துக்கு முரணான கருத்தையும் யாராலும் கூற முடியாது என்பதும் பிரித்தானிய நாடாளுமன்ற சம்பிரதாயங்களில் ஒன்றாகும்.

மூலாசனத்தினால் மாத்திரமே அதனைக் கட்டுப்படுத்த முடியும். சகல அமைச்சர்களும் பிரதமரின் கருத்துக்கு முரணான கருத்துக்களை தெரிவிக்கத் தொடங்கினால் ஆட்சி செய்ய முடியாது. இன்று எமது நாட்டு அரசாங்கத்தில் இவ்வாறான நிலைமையே காணப்படுகிறது. இது அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட பிரச்சினையாகும். ஆனால் தற்போது இதனை அதிகாரிகள் மீது சுமத்துவதற்கு முயற்சிக்கின்றனர். அதிகாரிகள் தகவல்களை வழங்கினாலும் பொறுப்பு கூற வேண்டியது அமைச்சராகும். அதிகாரிகளால் பொறுப்பேற்க முடியாது. ஆனால் அதிகாரிகள் சரியான தகவல்களை வழங்கியதாகவும், வாசித்தவர்களே அதனை தவறாக வாசித்ததாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்தன.

இதற்கு முன்னர் போலி சான்றிதழ் கொண்ட ஒருவர் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார். இது யாருடைய தவறு? இதுவும் அது போன்றதொரு சம்பவம் என்றே தோன்றுகிறது. முறையாக ஆராய்ந்து பார்க்காமல் பொறுப்பின்றி இருவரும் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். இதனால் முழு அராசங்கமும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கிறது. இவ்வாறு நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் மீறப்படும் போது அவை தொடர்பில் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டியது எனது கடமையாகும் என்றார்.

## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனைக் குழு பிரதமரின் தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மற்றும் ஆசிரியர் நிர்வாக சேவையில் பணியமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். விசேடமாக, வட மத்திய மாகாணத்திற்கு அண்மையில் நியமிக்கப்பட்ட 6 அதிகாரிகளில் 5 பேர் மீண்டும் இடமாற்றம் பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

அதற்கமைய, இது தொடர்பாக குழுவில் விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட பணியமர்த்தலைமேற்கொள்ளும் போது அதிகாரிகள் பற்றிய மனிதாபிமான விடயங்களும்கருத்திற்கொள்ளப்படவேண்டும் என இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன், அதிகாரிகளை பணியமர்த்தும் போது சேவையின் தேவை குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என பிரதமர் சுட்டிக்காட்டினார்.

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மற்றும் ஆசிரியர் நிர்வாக சேவையில் பணியமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பில் இதுவரை முறையான திட்டமொன்றோ பொறிமுறையொன்றோ இல்லை என்றும் தற்பொழுது அது தொடர்பில் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். அத்துடன், ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மற்றும் ஆசிரியர் நிர்வாக சேவையில் பணியமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பில் மனிதாபிமான விடயங்களையும் கருத்திற்கொண்டு மிகவும் சிறந்த முறைமை ஒன்றை தயாரிப்பதாக பிரதமர் மேலும் தெரிவித்தார்.

அதற்கு மேலதிகமாக, அங்கவீனமுற்ற மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கினார். அத்துடன், அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் நியமிக்கப்பட்ட 6 உபகுழுக்களின் முன்னேற்றம் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட உப குழுக்களின் தலைவர்கள் இதன்போது விடயங்களை முன்வைத்தனர். இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்பினர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## வேலையற்ற....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாரிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஆளும்தரப்பு மீறியுள்ளது.

35,000 பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கப்படும் என்றும் இவர்களில் 20,000 பேருக்கு ஆசிரியர் வேலை வழங்கப்படும் என்பதும் இந்த ஆளும்தரப்பு முன்வைத்த கொள்கை அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களம், இறைவரித் திணைக்களம், சுற்றுலாத் துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஆட்சேர்ப்புகளை செய்வோம் என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

பட்டதாரிகள் இவற்றில் உள்வாங்கப்படுவர் என்று வாக்குறுதியளித்தனர். ஆனால் தேர்தல்களில் வெற்றி பெற்றதன் பின்னர் அரசாங்கத்தால் இந்த வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. மூன்று தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ள போதிலும், பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் விவகாரத்தில் ஆளும்தரப்பு அசமந்தப் போக்குடனேயே செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

வேலையற்ற பட்டதாரிகளின் பிரதேச, மாவட்ட, மாகாண ஒன்றியங்களில் உள்ளவர்களுக்கு வாக்குறுதிகளுக்கு மேல் வாக்குறுதிகளை வழங்கி, பட்டதாரிகளைப் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி, தமது வாக்குகளை அதிகரித்து வெற்றி பெற்றாலும், ஆளுந்தரப்பைச்சேர்ந்த சகலரும் பட்டதாரிகள் விடயத்தில் இன்று கரிசனை செலுத்துவதாக இல்லை.

சகலரும் அவர்களை புறக்கணித்து வருகின்றனர். சர்வதேச நாணய நிதியத்திற்கு பயந்துதான் அரசாங்கமும் அரசுத்தலைவர்யும் இவ்வாறு தொழில் வழங்காதிருக்கின்றனரோ என்ற சந்தேகம் காணப்படுகிறது.

## அமைச்சர்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுப்பொறுப்பை மீறியமைக்காக அமைச்சர் பதவி விலகவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுப்ரிம் செட் செயற்கை கோள் தொடர்பில் பிரதமரால் நாடாளுமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்ட பதில், நாட்டில் இன்று பேசுபொருளாக மாறியுள்ளது. நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட இதுதாடர்பான கேள்விக்கு பிரதமர் பதிலளித்தாலும் அது பிரதமரிடம் கேட்கப்பட்ட கேள்வி அல்ல. சுப்ரிம் செட் முதலீடு என்பது நிதி அமைச்சுடன் தொடர்பான விடயமாகும். அதன் பிரகாரம் நிதி அமைச்சரான அரசுத் தலைவர்யின் கீழ் இருக்கும் முதலீட்டு சபையுடன் தொடர்பான இந்த கேள்விக்கு நிதி அமைச்சின் செயலாளர் ஹர்சன சூரியப்பெருமவே இதற்கான பதிலை தயாரித்திருக்க வேண்டும்.

அதேநேரம் நாடாளுமன்றத்தில் கேட்கப்படும் கேள்வி, சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தால், அதுதொடர்பில் பதிலை வழங்குவது தொடர்பில் ஆரம்மாக அமைச்சரவையில் கலந்துரையாடி இருக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. என்றாலும் சுப்ரிம் செட் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த செயற்கை கோள் முதலீட்டுக்காக முதலீட்டு சபையினால் எந்தவித பணமும் செலவிடவில்லை என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், சுப்ரிம் செட் செயற்கை கோள் முதலீடு தொடர்பாக பிரதமர் நாடாளுமன்றத்துக்கு தெரிவித்த பதிலுக்கு நேர் மாற்றமாக அமைச்சர் வசந்த சமரசிங்க மறுநாள் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இது அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறும் செயலாகும். அரசியலமைப்பின் 43 2ஆம் உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை நாடாளுமன்றத்துக்கு கூட்டாக பொறுப்புக்கூற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நாடாளுமன்றத்துக்கு ஒரு கருத்தை தெரிவிக்கும்போது, அமைச்சர் வசந்த சமரசிங்க அதற்கு மாற்றமான கருத்தை தெரிவித்திருந்தார்.

இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு விடயமா என்ற சந்தேகம் எழுகிறது. ஏனெனில் அரசுத் தலைவர்யின் பொறுப்புக்கு கீழ் இருக்கும் ஒரு விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்கும்போது, அதற்கான பதிலை அரசுத் தலைவர்க்கு பதிலாக பிரதமரே முன்வைப்பார். இந்த விடயத்தை தெரிந்துகொண்டுதான் இவ்வாறு செய்தார்களா? அதேநேரம் அமைச்சரவையில் அரசுத் தலைவர், பிரதமர், அமைச்சர் வசந்த சமரசிங்க ஆகியோர் ஒன்றாக இருக்கும்போது இதுதொடர்பில் கதைக்காமலா, அமைச்சர் வசந்த சமரசிங்க பிரதமரினால் தெரிவிக்கப்பட்ட பதிலுக்கு மாற்றமான கருத்தை தெரிவித்தார்?.

அதனால் வசந்த சமரசிங்க பிரதமரின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்டு இவ்வாறு செயற்பட்டாரா? அல்லது நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கு இவ்வாறு தெரிவித்தாரா? தெரியாது. எனவே அமைச்சர் வசந்த சமரசிங்க தான் தெரிவித்த கருத்து தொடர்பில் தெளிவுபடுத்தி மன்னிப்பு கோர வேண்டும். அல்லது அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை மீறியமைக்காக அவர் அமைச்சுப்பதவியை பதவி விலக வேண்டும் என்றார்.

## அரசுத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கவேண்டிய தேவை எமக்கு கிடையாது. அரசாங்கத்தின் பலவீனம் மற்றும் குறைப்பாடுகளை சுட்டிக்காட்டுவதும், ஆளும்தரப்பினர் குறிப்பிடும் கருத்துக்கள் அப்பட்டமான பொய் என்பதை வெளிப்படுத்துவதும் ஆளும்தரப்புக்கு எதிரான சூழ்ச்சி என்று அரசுத்தலைவர் கருதுவாராயின் அந்த சூழ்ச்சியில் முன்னிலை வகிக்க நான் தயாராகவே உள்ளேன்.

ஆளும்தரப்பை கவிழ்த்து தேசியத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வரலாறு மக்கள் விடுதலை முன்னணிக்கே உண்டு. 1971, 1987, 2006 மற்றும் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியே சூழ்ச்சி செய்து இந்த நாட்டில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

அரசுத் தலைவர் தனது உரையின்போது கடற்படையின் முன்னாள் தளபதி நிசாந்த உலுகேதென்னவின் கைது தொடர்பில் நான் குறிப்பிட்ட விடயங்களை குறிப்பிட்டார். கடற்படையின் முன்னாள் தளபதி நிசாந்த உலுகேதென்னவை ஆளும்தரப்பு கைது செய்யவில்லை. நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரமே அவர் கைது செய்யப்பட்டதாக அரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

கடற்படையின் முன்னாள் தளபதி நிசாந்த உலுகேதென்ன தொடர்பில் அரசுத் தலைவர் குறிப்பிட்ட விடயங்கள் பொய். இந்த விவகாரம் தொடர்பானவழக்கு பொல்காஹெலநீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குத் தொடர்பில் நீதிமன்றத்துக்கு பி அறிக்கை சமர்ப்பித்த குற்றப்புலனாய்வு பிரிவினர் 2010.07.25ஆம் திகதி முதல் 2011.03.30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதவியில் இருந்த கடற்படையின் தளபதி, புலனாய்வு அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளை விசாரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக நீதிமன்றத்துக்கு குறிப்பிட்டுள்ளனர்.

அதன்பின்னரே கடற்படையின் முன்னாள் தளபதி நிசாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டார். கைதுசெய்ததன் பின்னர் அவர் மீதுமனிதபடுகொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ளார். ஆளும்தரப்பு தனது தவறை மறைத்துக்கொள்வதற்கு நீதிமன்றத்தின் மீது பழி சுமத்துகிறது.

கடற்படையின் முன்னாள் தளபதி நிசாந்த உலுகேதென்னவின் கைது தொடர்பில் நான் குறிப்பிட்ட விடயங்கள் பொய்யாயின் அரசுத் தலைவர் எனக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளிக்கலாம். அரசுத் தலைவர்யின் ஆவேச பேச்சுக்கு நான் அச்சமடைய போவதில்லை என்றார்.

# இஸ்ரேலி இராணுவத்தின் இன அழிப்பை ஆளும்தரப்பு உறுதியாக கண்டிக்கவேண்டும்

## அரசியல் கட்சிகள் பல இணைந்து வலியுறுத்து

பலஸ்தீனில் இடம்பெறும் இஸ்ரேல் இராணுவத்தின் இனஅழிப்பை கண்டிப்பதுடன் பலஸ்தீன் மக்களின் உரிமைகளுக்காக ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டும் அரசியல் கட்சிகள் கூட்டாக தெரிவித்தனர். பலஸ்தீனம் தொடர்பில் ஆளும்தரப்பு உறுதியான நிலைப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

பலஸ்தீனை பாதுகாக்கும் தேசிய அமைப்பு நேற்று சிறிலங்கா கம்யுனிஸ்ட் கட்சி காரியாலயத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு கருத்து தெரிவித்த முஜிபுர் ரஹ்மான் எம்.பி , பலஸ்தீனில் இடம்பெற்றுவரும் இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு எதிராக இன்று உலகம்பூராகவும் எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றன. பலஸ்தீனுக்காக ஆரம்பத்தில் இருந்து குரல்கொடுத்துவரும் இலங்கை தற்போது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் இதற்கு முன்னர் பலஸ்தீனுக்காக குரல்கொடுத்துவந்த இவர்கள்இ இன்று ஆட்சிக்கு வந்த பின்னர் இதுதொடர்பிரல் எதுவும் கதைப்பதில்லை. எனவே பலஸ்தீனை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் ஊடாக எமது கண்டன அறிக்கை ஒன்றை இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை காரியாலயத்துக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் , தற்போதைய ஆளும்தரப்பு தனது வெளிநாட்டு கொள்கைக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறது. இஸ்ரேல் தொடர்பாக ஆளும்தரப்பு கடைப்பிடித்துவரும் கொள்கையை காணக்கூடியதாக இருக்கிறது. இஸ்ரேல் இனத்தவர்கள் சட்டவிராதமான முறையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது. அதனை தடுப்பதற்கு ஆளும்தரப்புக்கு முடியாமல் இருக்கிறது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ் மக்களின் எதிரொலி

கடந்த பொதுத் தேர்தலில் ஆளும்தரப்பு, வடக்கு–கிழக்கில் தமிழ் மக்களின் வாக்கு ஆதரவைத் தாம் பெற்றிருப்பதாக பெருமையுடன் அறிவித்தது. தேர்தல் மேடைகளில் அவர்கள் வாக்குறுதியளித்தது – தமிழ் மக்களின் பிரச்சினைகளை கேட்டு, தீர்வுகளை வழங்குவோம்; வடக்கு–கிழக்கின் வளர்ச்சிக்கு தடையாக உள்ள பிரச்சினைகளை அகற்றுவோம். ஆனால், தேர்தல் முடிந்த சில மாதங்களுக்குள், அந்த நம்பிக்கை மாறி, அதிருப்தி தீவிரமடைந்துவிட்டது.

இன்று, வடக்கு–கிழக்கில் பல்வேறு இடங்களில் மக்கள் சாலைகளில் குரல் கொடுக்கின்றனர். மன்னாரில், காற்றாலை திட்டங்களும் இல்மனைட் (Ilmenite) அகழ்வும் எதிர்ப்பை சந்திக்கின்றன. மக்கள் கூறுவது தெளிவாக இருக்கிறது – எங்கள் நிலம், எங்கள் கடல், எங்கள் வளங்கள் – எங்கள் அனுமதியின்றி கொள்ளையடிக்க முடியாது. சுற்றுச்சூழல் பாதிப்பு, வாழ்வாதார இழப்பு, கடல் உயிரினங்களின் அழிவு, மீனவர்களின் வாழ்வில் ஏற்படும் பாதிப்பு – இவை குறித்து மக்கள் அச்சத்துடன் பேசுகின்றனர். ஆனால் ஆளும்தரப்பின் அணுகுமுறை, ஆலோசனையை விட திணிப்பை முன்வைக்கிறது.

முல்லைத்தீவில் நடந்த சம்பவம் இன்னும் இருண்ட நிழலாகத் திகழ்கிறது. இராணுவ முகாமிற்குள் அழைக்கப்பட்ட இளைஞர் ஒருவர் பின்னர் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார். இந்த நிகழ்வு, போருக்குப் பிறகும் இராணுவ–மக்கள் உறவின் மீது நிலவும் நம்பிக்கையின்மையை மீண்டும் வெளிப்படுத்துகிறது. மக்கள் 'நீதியைக்' கோரி போராட்டங்களுக்கு இறங்குகின்றனர். இதற்கு பதிலாக ஆளும்தரப்பு, சம்பவத்தை தெளிவாக விசாரிக்கவும், உண்மையை வெளிப்படுத்தவும் விரைவாக முன்வர வேண்டிய நிலையில் இருந்தது. ஆனால், இதுவரை நடந்தது – மவுனமும், தாமதமும்.

செம்மணியில் மனித எலும்புக்கூடுகள் தொடர்ந்து கண்டெடுக்கப்படுகின்றன. இது, போர் காலத்தின் இருண்ட அத்தியாயங்களை மீண்டும் திறக்கிறது. குடும்பத்தினரை இழந்தவர்கள், 'என்ன நடந்தது? யார் பொறுப்பு?' என்ற கேள்விகளுக்குப் பதில் தேடுகின்றனர். ஆனால், ஆளும்தரப்பின் அணுகுமுறை, இந்தக் கேள்விகளுக்கு விடையளிப்பதை விட, விசாரணையை மந்தமாக்கும் போக்கைக் காட்டுகிறது. இதுவே, மக்களின் கோபத்தை அதிகரிக்கிறது.

இவ்வாறு மன்னார், முல்லைத்தீவு, செம்மணி – மூன்று வேறு இடங்களில் – மூன்று வேறு பிரச்சினைகள். ஆனால், மக்கள் முன்வைக்கும் அடிப்படை கோரிக்கை ஒன்றே: 'எங்களை கேளுங்கள்; எங்கள் நிலம், எங்கள் உயிர், எங்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.'

ஆளும்தரப்பின் மிகப் பெரிய தவறு – மக்களின் எதிர்ப்பைக் 'அரசியல் விளையாட்டு' எனக் குறைத்து மதிப்பிடுவதுதான். இது, பிரச்சினையின் தீவிரத்தையும், உண்மையான வேதனையையும் புறக்கணிக்கிறது. தேர்தல் நேரத்தில் 'நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்' என வாக்குறுதி அளித்தவர்கள், இன்று அந்த மக்களை சந்தித்து பேசுவதற்குப் பதிலாக, காவல்துறை, நீதிமன்ற தடைகள், மற்றும் நிர்வாக அழுத்தங்களை முன்வைக்கிறார்கள். இதன் விளைவாக, மக்கள் அரசியல் அமைதியின் பாதையில் நடப்பதை விட, நேரடியாக போராட்டங்களின் பாதையில் செல்கின்றனர்.

ஒரு பொறுப்பான ஆட்சி, மக்களின் கோரிக்கைகளை 'சட்டம்–ஒழுங்கு பிரச்சினை' எனக் குறைக்காமல், 'உரையாடல்–தீர்வு' வழியில் அணுக வேண்டும். மன்னாரில் காற்றாலை, இல்மனைட் அகழ்வு – இவை வளர்ச்சி திட்டங்கள் என அரசு கூறலாம். ஆனால், வளர்ச்சி என்பதன் பொருள், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்துவிடும் திட்டங்களாக இருக்கக்கூடாது. முல்லைத்தீவில் நடந்த மரணம் – அது வெறும் தனிப்பட்ட சம்பவமல்ல; அது போருக்குப் பிறகும் நிலவும் அவநம்பிக்கையின் பிரதிபலிப்பு. செம்மணியில் மீட்கப்படும் எலும்புக்கூடுகள் – அவை வரலாற்றின் சாட்சிகள்; அவற்றை புறக்கணித்தால், அது நீதி மறுப்பின் அடையாளமாகும்.

இன்று வடக்கு–கிழக்கில் தீவிரமடையும் போராட்டங்கள், ஒரே ஒரு திட்டத்தையோ சம்பவத்தையோ எதிர்ப்பதல்ல. அவை, 'எங்களின் வாழ்க்கையைப் பற்றிய முடிவுகளை எங்களுடன் ஆலோசனை இல்லாமல் எடுக்காதீர்கள்' என்ற அடிப்படை கோரிக்கையின் வெளிப்பாடு.

ஆளும்தரப்பு உண்மையில் தமிழ் மக்களின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ள விரும்பினால், இப்போதே திசைமாற்றம் செய்ய வேண்டும். மக்களுடன் நேரடி உரையாடல், திட்டங்களின் வெளிப்படைத்தன்மை, குற்றச்செயல்களின் விரைவான மற்றும் சுயாதீனமான விசாரணை – இவை தான் நம்பிக்கையை மீட்டெடுக்கும் வழி. இல்லையெனில், தேர்தல் வெற்றியின் போது தாமே சொன்ன 'தமிழ் மக்களின் ஆதரவு' என்ற கூற்று, வரலாற்றில் ஒரு வெறும் பொய்மையாகவே பதியப்படும்.

மக்களின் குரலைக் கேட்காத ஆட்சி, நீண்ட காலத்தில் தன்னுடைய குரலையே இழக்கும். வடக்கு–கிழக்கில் எழுந்திருக்கும் இந்தக் குரல், எச்சரிக்கை மணி மட்டுமல்ல – எதிர்காலத்தின் அரசியல் நிலையை நிர்ணயிக்கும் தீர்க்கக் குரலாகும்.

# யாழ். சர்வதேச புத்தகத் திருவிழா ஓகஸ்ட் 15 முதல் 3 நாள்களுக்கு

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில், இரண்டாவது 'யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா 2025' ஆனது எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை மூன்று தினங்களுக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு ஒன்று திங்கட்கிழமை (11) யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்ற அலுவலகத்தில் இடம்பெற்றது. அப்போது ஏற்பாட்டாளர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், 'நமது சமூகத்தில் வாசிப்பு கலாச்சாரத்தை மீட்டெடுக்கும் சமூகப் பொறுப்பு நமக்கு உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் வாசிப்பை மேம்படுத்தும் நோக்கில், இந்தப் புத்தகத் திருவிழாவை இலாப நோக்கமின்றிக் கடந்த ஆண்டு சிறப்பாக நடத்தினோம். அதற்கு கிடைத்த பெரும் வரவேற்பே இந்த ஆண்டும் சிறப்பாக ஏற்பாடு செய்ய எங்களை ஊக்குவித்தது' என்றனர்.

உள்நாட்டு, தேசிய மற்றும் சர்வதேச புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒன்றிணைத்து நடைபெறும் இந்தத் திருவிழாவில், வாசகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நூலகர்கள் என அனைவரும் ஒரே இடத்தில் பன்மொழிப் பதிப்பகங்களைக் காணவும், தள்ளுபடி விலையில் புத்தகங்களை வாங்கவும் வாய்ப்பு கிடைக்கும். அத்துடன், பிரபல எழுத்தாளர்களைச் சந்தித்துப் பேசவும், புத்தக வெளியீடுகளில் பங்குபெறவும், நாடக நிகழ்வுகளைக் காணவும் ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைக்கும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை புத்தகத் திருவிழாவை ஆரம்பித்து வைப்பதற்காக, பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் மற்றும் சிறப்பு விருந்தினராக மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மூன்று தினங்களும் புத்தகக் கண்காட்சிக்கு அப்பால் பல்வேறு கலை மற்றும் இலக்கிய நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# அத்துரலிய ரத்ன தேரர் தலைமறைவு பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தலைமறைவாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓபிபிபி கட்சியின் பொதுச்செயலாளர் வெதினிகம விமலதிஸ்ஸ தேரர் 2020 இல் கடத்தப்பட்டமை தொடர்பிலான வழக்கில் அத்துரலிய ரத்ன தேரரை தேடிவரும் பொலிஸார் அவர் தலைமறைவாகியுள்ளார் என தெரிவித்துள்ளனர்.

அத்துரலிய ரத்ன தேரரின் ராஜகிரிய ஆலயம், தியானநிலையங்கள் உட்பட பல இடங்களிற்கு அவரை தேடிச்சென்றதாக தெரிவித்துள்ள கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் அவரை எங்கும் கண்டுபிடிக்கமுடியவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

அத்துரலிய ரத்ன தேரரை அவரது தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முடியவில்லை என தெரிவித்துள்ள பொலிஸார் அவர் நாட்டிலிருந்து தப்பியோடுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ச மற்றும் அவ்வேளை மேல்மாகாணத்திற்கான சிரேஸ்ட பிரதிபொலிஸ்மா அதிபராக விளங்கிய தேசபந்து தென்னக்கோன் ஆகியோருடன் தொடர்புபட்ட சம்பவம் தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அத்துரலிய ரத்னதேரரை தேடுவதாக தெரிவித்துள்ள பொலிஸார் இருவரையும் விசாரணை செய்யவுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் தேசிய பட்டியல் ஆசனத்தை பெறுவதற்கான கையெழுத்தை பெறுவதற்கு அத்துரலிய ரத்ன தேரர் ஓபிபிபி கட்சியின் பொதுச்செயலாளர் வெதினிகம விமலதிஸ்ஸ கடத்தினார் என்ற குற்றச்சாட்டு உள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் அந்த ஆவணத்தில் கையெழுத்திடாவிட்டால் தன்னை கொலை செய்யப்போவதாக வெதினிகம விமலதிஸ்ஸ தேரர் தெரிவித்தார் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

# பொரளை துப்பாக்கிச் சூடு தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் நேற்றுக் கைது

அண்மையில் கொழும்பு பொரளை சஹஸ்புர விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே இந்த துப்பாக்கிச்சூட்டின் போது காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சை பெற்று வந்த மற்றுமொரு இளைஞர் உயிரிழந்துள்ளார்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிரிசர உயன அடுக்குமாடி தொடர்பு குடியிருப்பு அருகில் உள்ள சஹஸ்புர விளையாட்டு மைதானத்தில் இருந்த இளைஞர்கள் குழுவொன்றை இலக்கு வைத்து கடந்த 7 ஆம் திகதி இரவு ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தனர்.

இதன்போது இளைஞர்கள் 5 பேர் காயமடைந்திருந்ததுடன் அவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும் அன்றைய தினமே களனி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

அவர் பாதாள உலகக் குழுவின் உறுப்பினர் என அடையாளம் காணப்பட்ட "சத்து" என்பவரின் சகோதரரால் ஒழுங்க செய்யப்பட்டிருந்த கிரிக்கெட் போட்டிக்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்ட ஒருவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்து சிகிச்சைப்பெற்று வந்த மற்றுமொரு இளைஞர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவர் 22 வயதுடைய பொரளை சிரிசர உயன பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மற்றைய மூன்று இளைஞர்களும் தொடர்ச்சியாக சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இந்தத்துப்பாக்கிசூட்டுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் மூன்று சந்தேகநபர்கள் கொழும்பு தெற்கு பொலிஸ் குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் 29, 28 மற்றும் 36 வயதுடைய பொரளை மற்றும் தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கி பிரயோகத்தில் போது குறித்த மோட்டார் சைக்கிளின் ஓட்டுநராக செயற்பட்டவருடன் குறித்த சந்தேக நபர்கள் மூவரும் நெருங்கிய தொடர்புகளை பேணியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவருக்கு சந்தேகநபர்களே புதிய சிம் அட்டை ஒன்றையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த மூவருக்கும் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருட்களை துப்பாக்கிதாரிகள் பெற்றுக்கொடுத்துள்ளமை மேலதிக விசாரணைகளின்போது வெளிக்கொணரபட்டுள்ளது.

மேலும் துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தமது கைத்தொலைபேசியை செயலிழக்கசெய்து விட்டு குறித்த பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரிகள் "குடு சமிந்த" என்பவரின் நெருங்கிய தரப்பினர் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
46, Brodie Lane , Jaffna.

# கச்சதீவு தொடர்பான அறிகைகளுக்கு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை

## நீதி சமாதான ஆணைக்குழு அறிக்கை

கச்சதீவை இலங்கைக்குத்தாரை வார்த்தது மிகபெரியவரலாற்றுத்தவறெனகுறிப்பிடுவது தொடர்பாக நாம் அலட்டிக்கொள்ள தோவையில்லை என தெரிவித்து யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இந்திய அரசியலில் அதிலும் குறிப்பாகத் தமிழக அரசியலில் அடிக்கடி கச்சதீவு விவகாரம் சூடு பிடிப்பது வழமை. தேர்தல் காலங்களிலும் மற்றும் எல்லைதாண்டி இலங்கைகடற்பரப்பில் இந்திய மீனவர்கள் வந்து இலங்கை மீனவர்களது வளங்களை சூறையாடி, வலைகளைச்சேதமாக்கும் போதும்இலங்கைக்கடற்படையால்அவர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்படும் போதும் தமிழக முதல்வர் கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது போல திரும்பப்பெறுவதுதான் தமிழக மீனவர்களது பிரச்சினைக்குத்தீர்வு என்று கோஷமிடுவது சர்வசாதாரணம்.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி சில நாட்களுக்கு முன் கச்சதீவை காங்கிரஸ் ஆட்சியில்இருந்தபோதுஇலங்கைக்குத்தாரை வார்த்தது மிக பெரிய வரலாற்றுத்தவறு என்று குறிப்பிட்டிருந்தார்.

வட பகுதிக்கு அல்லது முன்னர் வடக்கில் இருந்த யாழ்ப்பாண இராச்சியத்திற்குச் சிறப்பைக் கொடுப்பதற்கு தீவுகள் முக்கியமானதொரு காரணமாகும். மன்னார் துவங்கி காரைதீவு (காரைநகர்), வரையுள்ள இரணைதீவு, பாலைதீவு, நெடுந்தீவு, கச்சதீவு, புங்குடுதீவு, கற்கடதீவு, எழுவைதீவு, நயினாதீவு. மண்டைதீவு, ஆகியவை இவை. இவற்றுள் மன்னார், ஊர்காவற்துறை, மண்டைதீவு, புங்குடுதீவு, காரைநகர் ஆகியவை தரைவழிப்பாதையால் இலங்கைப்பிரதான நிலப்பரப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் எல்லாத்தீவுகளிலும் மக்கள் வசிப்பதில்லை. குறிப்பாக நெடுந்தீவுக்கு அருகிலுள்ளகச்சதீவில்மக்கள்வசிப்பத்தில்லை. வருடத்தில் ஒரு முறை மட்டும் இடம் பெறும் கத்தோலிக்க மக்களின் புனித அந்தோனியார் திருநாளுக்கு மட்டும் மக்கள் இலங்கையின் குறிப்பாக வட மாகாணத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் போவார்கள்.

வடக்கில் பெரும்பான்மையினராக இருக்கும் இந்து மத சகோதரர்களும் கணிசமானளவு தொகையினர் இங்கு வருவதுண்டு. இந்தியாவிலிருந்தும் ஆயிரக்கணக்கில் மக்கள் வருவார்கள் திருநாட் காலங்களில் மக்கள் போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் முக்கிய ஏற்பாடுகளுக்கு இலங்கைக் கடற்படையினர் பொறுப்பாயிருப்பார்கள்.

கச்சதீவுத் திருநாளுக்கு சில வாரங்குளுக்கு முன் யாழ்ப்பாணச் செயலகத்தில் அரச அதிகாரிகள் பாதுகாப்புத்தரப்பினர் யாழ் மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதிகள் கூடி திருநாளுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருவது வழக்கம்.

திருநாள் இல்லாத மற்ற நாட்களில் இலங்கையிலிருந்து மட்டுமல்ல இந்தியாவிலிருந்தும் கடற்தொழில் செய்பவர்கள் சற்று ஓய்வெடுக்க அல்லது வலைகளைக் காயப்போட இங்கு வந்து போவார்கள். இந்தியக் கடற்தொழிலாளர் பெரும் எண்ணிக்கையில் இங்கு வந்து போவதாலும் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட அந்தோனியார் கோயிலுக்கு இவர்களும் வந்து வழிபட்டுச்செல்வார்கள்.

நேர்த்திக்கடன் போன்ற கடன்கள் செய்வதற்கும் சில சந்தர்ப்பங்களில் நன்கொடைகள் வழங்குவதற்கும் வருவார்கள். இந்தப் பின்ணனியிலும் கணிசமானளவு இந்தியக்கடற்தொழிலாளர்கள் வருவதாலும் கச்சதீவு இந்தியாவுக்கா இலங்கைக்கா சொந்தம் என்ற ஒரு மயக்கம் உருவானது

ஆயினும் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைவதற்கு பல தசாப்தங்களுக்கு முன்னிருந்தே கச்சதீவில் புனித அந்தோனியார் சிற்றாலயம் ஒன்றிருந்தது. இவ்வாலயம் யாழ்ப்பாணக் கத்தோலிக்க மறைமாவட்டத்தின் கீழ் உள்ள நெடுந்தீவுப் பங்கின் கீழ் இருந்தது. நெடுந்தீவுப் பங்கில் உள்ள பங்குத் தந்தைதான் இவ்வாலயத்திற்கு நேரடிப் பொறுப்பாயிருந்து வந்துள்ளார்.

கச்சதீவு திருநாளுக்குச் சில நாட்களுக்கு முன் நெடுந்தீவுப் பக்கத்திலிருந்து பங்குத்தந்தையின் பணிப்புரையில் கச்சதீவு மூப்பர்' என்றழைக்கப்பட்ட (மூப்பர் அல்லது கணக்குப்பிள்ளை என்னும் கத்தோலிக்க ஆலய நிர்வாக முறை 16ம் நூற்றாண்டில் புனித சவேரியார் காலத்திலிருந்து ஒரு ஆலயத்தில் குரு நிரந்தரமாத் தங்குவதில்லை யென்றால் அவ்விடங்களில் ஆலயப்பராமரிப்பு, மக்களின் ஆன்மீக நலன் சம்பந்தமான விடயங்களுக்கு இந்த மூப்பரே பொறுப்பாயிருப்பார்.

பங்குத்தந்தை வரும் போது இவரே அனைத்துக்கும் பொறுப்பு கூறுபவராக இருப்பார். இப்போது அனேகமான ஆலயங்களில் வதிவிடப்பங்குத்தந்தை இருப்பதால் பெரும்பாலும் இந்த மூப்பர் முறை நடைமுறையில் இல்லை.) அல்லது வழிபாடுகளுக்கு ஆயத்தம் செய்பவர் யாத்திரிகளது தேவைகளையும் கவனிப்பார். சில உதவியாளர்களுடன் சென்று அங்குள்ள சிற்றாலயம், அதன் சுற்றுப்புறம் ஆகியவற்றைச் சுத்தம் செய்வார்.

பங்குத்தந்தையும் சில நாட்களுக்கு முன் சென்றுஇப்பணிகளைமேற்பார்வைசெய்வார். இவ்வாறு செய்த பழைய மூப்பர்களின் வாரிசுகள் இப்போதும் நெடுந்தீவில் உள்ளனர். அண்மைக்காலங்களில் கடற்படையினர் உணவு, குடிநீர் ஏற்பாடுகள் பலவற்றை கடற்படையினர் செய்துவருகின்றனர்.

யுத்தகாலத்தில் கச்சதீவு திருநாள் ஒழுங்காக இடம் பெற்றிருக்கவில்லை. இங்கு ஒரு தற்காலிக கடற்படை முகாமும் இருந்தது. யுத்தம் முடிவடைந்தபின் யாத்திரைகள் கிரமாக இந்திய இலங்கை யாத்திரிகாகளுடைய பங்குபற்றுதலுடன் இடம் பெற்று வருகின்றன.

யாழ்மறை மாவட்ட ஆயரின் பணிப்புரையில் நெடுந்தீவுப்பங்குத்தந்தையே வழிபாட்டுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கின்றார். யாழ் ஆயரின் அழைப்பின்பேரில் தான் இந்தியாவின் தங்கச்சி மடம் பங்குத்தந்தையும் வேறு சில குருக்களும் துறவிகளும் வருகின்றனர். இந்திய யாத்திரிகளது எண்ணிக்கை போன்ற ஏற்பாடுகள் எல்லாம் யாழ் கச்சேரியில் நடக்கும் கூட்டங்களில் முடிவு செய்யப்படுகின்றது.

இந்திய யாத்திரிகள் கணிசமானளவு வருகின்றமையால் இந்திய குருக்களுக்கும் கூட்டுத்திருப்பலி மற்றும் வழிபாடுகளில் கணிசமான பங்கு வழங்கப்படுகின்றது. கச்சதீவுப்பெருநாள் ஏற்பாடுகளும், வழிபாட்டு ஒழுங்கமைப்பும் இலங்கை அரசினதும், யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயரின் பணிப்புரையிலேயே நடைபெற்றுவருகின்றது.

நிறைவாக கச்சதீவு கடந்த பல தசாப்தங்களாக (யுத்தகாலம் நீங்கலாக) இந்திய இலங்கை யாத்திரிகள் ஏறக்குறைய சரிக்குச்சரி எண்ணிக்கையில் வந்துபோனமையாலும், திருநாள் இல்லாத வருடத்தின் எஞ்சிய நாட்களின் இரு நாட்டுக்கடற்தொழிலாளரும் கச்சதீவுக்குச் சர்வசாதாரணமாக வந்து ஓய்வெடுத்து இங்கிருந்த அந்தோனியார் சிற்றாலயத்தில் வணங்கிச் சென்றதாலும் அரசியல், புவியியல் ரீதியில் கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்ற கேள்வி குறிப்பாக இந்திய தரப்பில் கேட்கப்பட்டுவந்தது.

இப்பகுதியில் இலங்கைக் கடலில் அத்துமீறி வந்து மீன்பிடிப்பதில் இந்தியமீனவர்கள்இலங்கைக்கடற்படையால்கைதுசெய்யப்படுவது போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதால் கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது தவறு என்று தமிழக அரசியல் தரப்பிலும் இந்திய மத்தி அரசிலும் கோஷங்கள் எழுப்பப்படுகின்றன.

உண்மையில் 1974ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது ஆணித்தரமாக கச்சதீவு இலங்கைக்கே சொந்தம் அதில் இந்தியா உரிமை கொண்டாடப் போவதில்லை என்று அறிவித்தமை கச்சதீவை இலங்கைக்குத்தாரை வார்த்து கொடுத்தமையாகாது. ஏனெனில் கச்சதீவு ஒருபோதும் இந்தியாவின் ஆட்சிக்கும் நிர்வாகத்திற்கும் கீழ் இருந்ததில்லை.

இந்த பின்னியில் கச்சதீவை இலங்கைக்கு தாரைவார்த்து கொடுப்பது அல்லது மீளப்பெறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. இதனை அப்போதே யாழ் ஆயராக இருந்த கலாநிதி. . தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ் ஆயரில்ல ஆவணங்களிலிருந்தும் யாழ் ஆயரின் நிர்வாகத்தின் கீழ் நெடுந்தீவுப் பங்குப் பதிவேடுகள் அங்குள்ளவர்களின் வாய்மொழி பாரம்யபரியங்களிலிருந்தும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எனவே ய இந்தியப் பிரதமரின் கூற்றாகிய 1974 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியிலிருந்த போதுதான் கச்சதீவு இலங்கைக்கு வழங்கப் பட்டது. அப்போது தமிழ் நாட்டில் தி.மு.க கட்சியும் காங்கிரஸ் ஆட்சியின் பங்காளியாக இருந்தது என்பது பற்றியெல்லாம் நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

புதிய, 2016ம் ஆண்டு தற்போதைய ஆயர் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பொறுப்பேற்றபின் பலவருடங்களாக குறிப்பாக போர்க்காலத்தில் கவனிப்பாரற்று சிதைவடைந்த நிலையில் ஒரு பல்லாயிரக்கணக்கான யாத்திரிகள் கலந்துகொள்ளும் படியான ஒரு ஆலயம் கட்டவேண்டிய தேவையை உணர்ந்து கடற்படையினரிடம் அனுசரணையைக் கோரியபோது.

அவர்களது அனுசரணையில் ஒரு புதிய அழகிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இந்திய யாத்திரிகர்களும் வருகின்றனர் மற்றும் கடற்தொழிலாளரும் இங்கு மற்ற நாட்களில் வந்து ஓய்வெடுக்கவும் தமது வலைகளைக் காயப்போடவும் அவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதி தொடர்ந்து பேணப்படுகின்றது என்றுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2025இல் வெளியிடப்பெற்றது